தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1969 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

* 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 535 வரை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Connemara Library Building.

*** 536** *Q.*—**Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—**

(*a*) whether there is any leakage in the building in which the Connemara Public Library is housed at Egmore ;

(*b*) if so, since how long ; and

(*c*) the steps taken by this Government to repair the library building ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம்.

(உ) அவ்வாறு நீர் ஒழுக்கல் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படும் போதெல்லாம் உடனடி நடவடிக்கைகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்கொள்கின்றனர்.

Dr. H. V. HANDE : Is it a fact that in a number of places, where there are cubicles at the bottom, a number of valuable journals and periodicals have been affected by this leakage ? If so, will the Hon. Minister be able to tell us the estimated extent of damages caused by this leakage ? What action has been taken by the concerned departments to see that these books and periodicals are made ' utilisable ' once again ? What is the extent of the damage this time ? Is this a chronic feature or has it happened only last year ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் 1896-ம் ஆண்டிலே கட்டப்பட்டது. ஆகவே, அடிக்கடி ஒழுகல் ஏற்படுகிறது என்பது உண்மைதான். அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு பொதுப்பணித் துறையினர் அதைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்தார்கள். கடந்த மழைக் காலத்திலே ஏற்பட்ட ஒழுகலும் உண்மைதான். எவ்வளவு டாமேஜ் ஆகி இருக்கிறது என்பதுபற்றி குறிப்பு இல்லை. ஒழுகல் ஏற்பட்ட உடனே பொதுப்பணித் துறையினர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து எப்போது எப்போது ஒழுக்கல் ஏற்படுகிறதோ, அப்போது அப்போது பழுது பார்க்கப்பட்டதாகத் தெரிகிறது. கடந்த 10 ஆண்டு காலத்திலே எத்தனை முறை ஒழுகல் ஏற்பட்டிருக்கிறது ? அத்தனை முறையும் பழுது பார்க்கப் பட்டிருக்கிறதா ? இப்படி இருப்பதால் இந்த நூல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, ஒழுகல் ஏற்பட்டதுபற்றி கொடுக்கப்பட்டதால்தான் அப்படிப் பதில் இருக்கிறது. அந்தக் கட்டடம் முழுவதையும் விட்டுவிடுவதற்கில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் நானும் அதிகாரிகளிடம் கேட்டேன், இப்போது எதுவும் இல்லை, மழை காலம் வருவதற்கு முன்னாலேயே எச்சரிக்கையாகப் பழுது பார்க்கிறோம் என்று சொன்னார்கள்.

திரு. ம. சோ. கோவிந்தராசன் : இந்தக் கன்னிமாரா லைப்ரரியில் ஒழுகல் ஏற்படுவதுபோல், மதுரையிலுள்ள மகாலிலே ஒழுகல் ஏற்படுவதால் அதைப் பழுது பார்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கேயுள்ள நீதி மன்றங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கட்டடத்தை சரித்திரப் பூர்வமான சின்னமாக ஆக்க 5 லட்சம் ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டவுடன் அந்த நீதி மன்றங்களை மாற்றுவது பற்றிய வேலை பின்னால் தொடரும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்னிமாரா லைப்ரரியில் நீர்க்கசிவு இருக்கிற காரணத்தால் குறிப்பிட்ட மதிப்புமிக்க நூல்கள் செல்லரிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செல்லரித்துவிட்ட நூல்களைப் புதுப்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒழுக்குகள் ஏற்படுவதுபற்றிதான் என்னிடத்தில் குறிப்பு இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறது. புத்தகங்கள் புதுப்பிப்பது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

Dr. H. V. HANDE : The Hon. Minister said in his reply that a number of books had been spoiled. Will the Minister be able to tell us whether the concerned Librarian drew the attention of the Government to the leakage immediately after the books were affected last year or was he waiting till this question was tabled ? May I know whether the Government have any long-term programme or short-term programme to see that the building is properly repaired so that there may not be such leakage and such damages to the books and periodicals in future ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புத்தகங்கள் பழுது அடைந்தது என்பதுபற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஒழுகலைப் பழுது பார்ப்பது பற்றி உடனடியாக பொதுப்பணித் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் பழுது பார்க்கின்றனர். மழைக் காலத்தில் அதை எதிர்பார்த்து அவர்கள் அதைப் பழுதுபார்க்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

Temporary Assistant Professors, etc.

* 537 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of Assistant Professors, Tutors and Demonstrators ousted from Government Colleges in April 1968 ; and

(*b*) whether it is proposed to re-appoint them in future vacancies ?